**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. 37/2022**

**Date : 21.01.2026**

**வா.சா. 1 - தமிழ்செல்வன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

வழக்கு பட்டிகை சொத்தின் பழைய புல எண் என்ன என்றால் ஞாபகம் இல்லை. பழைய புல எண் சம்மந்தமான வரைபடமோ, செற்றில்மெண்ட் ரெஜிஸ்டரோ நான் பார்த்ததில்லை மற்றும் தாக்கல் செய்வில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 விலையாதார பத்திரத்தின் முன்பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 எழுதி கொடுத்த முன்ஜன்மிகள் உயிருடன் இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். வா.சா.ஆ.1 ன் படி 20 செண்ட் 995 சதுர லிங்ஸ் கிரணம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ன் பழைய சர்வே எண். 5241 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்துள்ளது 5.728 செண்ட் சம்மந்தமாக என்றால் சரிதான்.

மேற்படி 5.728 செண்ட் தவிர மற்ற சொத்துக்களை விலைக்கு கொடுத்து விட்டேன் என்றால் சரிதான். அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வில்லை என்றால் சரிதான். மேற்படி விற்ற சொத்திற்கான வரைபடங்கள் மற்றும் அளவுகள் குறிக்கப்பட்டு விற்கப்பட்டது என்றால் சரிதான். முதலில் விலைக்கு கொடுத்த சொத்து எது யாருக்கு என்றால் வடக்கு பக்கம் விஸ்வநாதனுக்கு. எத்தனை செண்ட் என்றால் ஞாபம் இல்லை. இரண்டாவதாக யாருக்கு எத்தனை செண்ட் கொடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. முன்றாவதாக யாருக்கு எத்தனை செண்ட் கொடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. மூன்று சொத்தினை விற்றதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். 20 சென்ட்டில் விற்றது போக மீதம் இருக்கும் 5.728 சென்ட் தென்மேற்காக உள்ளது என்றால் சரிதான். வாதுரையில் 5.728 சென்ட்க்கு வடக்கு பிரதிவாதியின் சொத்து சர்வே எண்491/10 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரீசர்வே எண் படி பிரதிவாதியின் சொத்து சர்வேஎண்.491/10 ன் படி உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை பார்த்துள்ளேனா என்றல் பார்க்கவில்லை.

முதல் விசாரணையில் வழக்கு ஏ பட்டிகையாக சொல்வது என்ன சொத்து என்றால் பாலையா மற்றும் பாலகிருஷ்ணன் என்பவர்களிடம் இருந்து வாங்கிய சொத்து. முதல் விசாரணையில் வழக்கு ஏ பட்டிகை சொத்து எனக்கு சொந்தமானது என்று கூறியுள்ளேன் வாதுரையில் வழக்கு ஏ பட்டிகை சொத்து குறித்து விபரம் இல்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் வழக்கு பட்டிகை சொத்தின் தெற்கு பிரதிவாதியின் சொத்து உள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது 5.728 சென்ட்டில் தெற்கு மற்றும் கிழமேல் நீளம் தெரியமா என்றால் தெரியாது. கிழக்கு மற்றும் மேற்கே தென்வடல் நீளம் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகளுக்கு மற்றும் அருகில் உள்ள நபர்களுக்கு உட்பிரிவு குறித்து அறிவிப்பு மற்றும் ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது**.